தொகுதி-ருரு Vol. 55
பகுதி-அ No. 8

செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1990
விகாரி-கார்த்திகை
November-1959

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

உள்ளுறை

1. அகப்பொருள் தெளிவு — 221
வீ. ப. கா. சுந்தரம்
2. சங்க நூற் சிறப்பு — 231
மது. ச. விமலானந்தம்
3. உலகச் சமயங்கள் — 239
கி. பழநியப்பன்.
4. கடவுள் வாழ்த்து — 244
கி. பழநியப்பன்
5. தொல்காப்பியத்திற் சில வழக்காறுகள் — 245
கு. மா. திருநாவுக்கரசு
6. மதிப்புரை — 251
கு. மா. திருநாவுக்கரசு

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி. டி. இராசன். B. A., (Bar-at-Law) M. L C.
2. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர். ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.
3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார் M. A. L. T. M. O. L. Ph. D, சென்னை.
4. திரு. பேராசிரியர், பி. சோதிமுத்து. M. A. B. D.
5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.
6. திரு. வி. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.
7. திரு. கி. பழநியப்பன்,
8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர், தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

3582

உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி ருரு	திருவள்ளுவர் ஆண்டு 1990	பகுதி அ
Vol. 55	விகாரி—கார்த்திகை 1959—November	No. 8.

அகப்பொருள் தெளிவு

[வித்துவான் வீ. ப. கா. சுந்தரம் M. A.,]
(அமெரிக்கன் கல்லூரி, மதுரை.)

---

1 கைக்கிளை:—

அகவொழுக்கங்களைத் தொல்காப்பியர் ஏழுதிணைகளாக வகுத்து அமைத்துள்ளார். அவையாவன:- கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனும் ஐந்திணை, பெருந் திணை. ஆகவே கைக்கிளையை முதலாகவும் பெருந்திணையை இறுதியாகவும் ஒழுக்கச் சிறப்புத் தோன்ற ஐந்திணையை நடுவணதாகவும் நிரல்படுத்தியுள்ளனர் கைக்கிளை என்பது தலைவன் தன் காதல் வேட்கையைக் காதல் கவர்ச்சியுறாத தலைவியிடம் சொல்லுதல் எனப் பொருள்படும். கைக்கிளை பற்றித் தொல்காப்பியமும் பிற்கால இலக்கண நூற்களும் வேறு வேறு விளக்கங்கள் கூறுகின்றன. அவையாவற்றை யும் ஒப்பிட்டு எங்ஙனம் பொருத்தமுடையன எனக் காண் போம்.

கைக்கிளைச் சொற்பொருள்:—

''கைக்கிளை யென்பது ஒரு மருங்கு பற்றிய கேண்மை' என்று நச்சினார்க்கினியர் உரை கூறினர். கை = ஒரு பக்

கம். கிளை = உறவு. எனவே ஒருபக்கக் காதலாயிற்று. "கைக்கிளை யுடையது ஒருதலைக் காமம்" என நாற்கவிராச நம்பியாரும் நூற்பா அமைத்தார். இனி, தொல்காப்பியர் கருத்தும் நம்பியார் கருத்தும் முரண்பட இருத்தலால் அவற்றைத் தனித்தனியே முதற்கண் தெளிந்து கொள்வோம்.

தொல்காப்பியரின் விளக்கம்:—

கைக்கிளை நூற்பா (50) வின் கருத்து இது:— தலைவன் ஓர் அழகிய இளம் பெண்ணைக் கண்டு காதல் கொள்கிறான். அவளோ அவன்பால் காதல் கொள்ளாதவள்; அவனோ அவளின்றி வாழ இயலாதவன். அவளே அவன் நோய்க்கு அருமருந்தாவாள் எனப் பெருந்துயரடைகின்றான். அவள்பால் சென்று புகழ்ந்தும் நகைச்சுவைபடப் பழிப்பது போல் போற்றியும் பலவாறு அன்புரைக்கின்றான். இவ்வாறு அன்பைப்பெருக்கிய (தருக்கிய) சொற்களைத் தன்னோடும் அவளோடும் இணைத்துச் சொன்னாலும் காமக் கவர்ச்சியுறாத பெண் ஆகையால் மறுமாற்றம் கூறாதிருக்கின்றாள். ஆனால், இவனோ தன்னுணர்ச்சியால், தன்னுரைகளால் மகிழ்ந்து கொள்கிறான். இக்கருத்தைத் தரும் நூற்பா வருமாறு:—

50. "காமம் சாலா இளமை யோள் வயின்
ஏமம் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தால்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே"

[காமம் சாலா = காமம் நிறையா, ஏமம் சாலா = உய்யும் வழி அமையாத, தருக்கிய = பெருக்கிய (நச்சர்) = ஒத்த (இளம்பூரணர்). நன்மை தீமை = புகழ்தல் பழித்தல். புல்லி = பொருந்தி.]

க்கைக்கிளைக்கு எடுத்துக்காட்டு:

(குறிஞ்சிக்கலி 20)

முதிர் கோங்கின் முகை என
முகஞ்செய்த குரும்பை எனப்
பெயல்துளி முகிழ் எனப்
பெருத்தநின் இளமுலை
மயிர் வார்ந்த வரிமுன்கை
மட நல்லாய் நிற்கண்டார்
உயிர் வாங்கு மென்பதை
உணர்தியோ உணராயோ"

இங்கு முலையை முகை என, குரும்பை என வருணிப்பதால் காமஞ்சாலா இளமையோள் என்பது தெளியலாம். நிற் கண்டார் உயிர்வாங்கும்" என்றதால் பழிப்பதுபோல் புகழ் தலைத் தெரியலாம். உணர்தியோ, உணராயோ என வினவு வுதால் இளையோள் தனக்கு மாற்றம் கூற இயலாதவள் என்பதைத் தெளியலாம். எனவே, இவன் சொல்லெதிர்பெறாது சொல்லிமட்டும் இன்புறுகிறான்.

ஆகவே தொல்காப்பியர் கூறிய கைக்கிளைத் திணை ஆட வர்க்கே யுரியது. காமக் கவர்ச்சி பெறாதவள்பால் ஒருவன் தன் காமம் சொல்லி இன்புறுவதையே கைக்கிளைத்திணை என்று விரிவாகத் தெளிவுறுத்தியுள்ளார்.

நம்பியார் விளக்கம்:— நாற்கவி ராசநம்பியார் கைக் கிளையை அகத்திணைக் கைக்கிளை எனவும் அகப்புறக் கைக் கிளை எனவும் இருபிரிவுகளாக்கி, வரையறவும் கூறியுள் ளார். அகத்திணைக் கைக்கிளையாவது களவுப் புணர்ச்சிக்கு முன் நிகழ்வது. காமம் நிறைந்த ஓர் இளம் மங்கையிடத்தே அவள் காமக் குறிப்பை அறியும் வரைக்கும் அணுகாது நின்று தன் நெஞ்சொடு கூறுதலாகும். நூற்பா:—

"காமம் சான்ற இளமை யோள் வயின்
குறிப்பறி காறும் குறுகாது நின்று
குறிப்படு நெஞ்சொடு கூற லாகும்"

அதன் வகை:—

காட்சி ஐயம் துணிவுகுறிப் பறிவென
மாட்சி நான்கு வகைத்தே கைக்கிளை.

காட்சி, ஐயம், தெளிவு குறிப்பறிவும் கைக்கிளை யாகா.

(1) அன்பின் ஐந்திணை உயர்ந்த காம நெறியாகும். கைக்கிளையும் பெருந்திணையும் தாழ்ந்த காம நிலைகள். காட்சி, ஐயம், தெளிவு, குறிப்பறிவு முதலியன களவியலின் பாற்படுவன. ஆகவே உயர்ந்த ஐந்திணையுள் அடங்குவன வற்றை, தாழ்ந்த காம நிலையாகிய கைக்கிளை எனல் எவ்வாறு பொருந்தும்? ஒரு கோவேறு, ஐந்து குதிரைகள், ஒரு கழுதை என ஏழு பகுதிகளாகப் பிரித்துத் தனித்தனியாக்கிய பின்னர் கோவேற்றினையும் குதிரைகளோடு சேர்த்து அதனையும் குதிரைதான் என்றால் முதலில் ஏன் வெவ்வேறாக, ஏழாகப்பிரித்தல் வேண்டும்? கோவேறு வேறு, குதிரை வேறு; கைக்கிளை வேறு, ஐந்திணை வேறு. இரண்டனையும் இணைத்தல் பிரிவுமுறை நெறிக்குப் பொருந்தாது.

(2) மேலும் களவியலில் நிகழும் காட்சி தலைவன் தலைவி இருவர்பாலும் நிகழ்வன. ஆனால் நம்பியாரே, கைக்கிளை என்பது ஒருமருங்கு பற்றிய காமம் என்றார். இவ்வாறு முதலில் வரையறவு கூறிவிட்டுப் பின்னர், அவரே "கறைவேல் காளையும் கன்னியும் காண்ப" எனக்கூறுவது முரணிக்கூறுவதாகும். காட்சியின் இலக்கணமாகத் தொல்காப்பியரும், "ஒன்றியிருக்கும்படிச் செய்யும் ஊழது ஆணையால் ஒத்த தலைவனும் தலைவியும் காண்பார்" என்றனர். "ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப" என்றதால் காட்சி இருமருங்கு நிகழும் செயலே யன்றி, ஒருபக்கக் காதல் ஆகாது. இஃது எவ்வாறு கைக்கிளையாகும்? இஃது 'உளமலிகாதற்' களவியலிலே குறிஞ்சித் திணை யின்பாற்படும்.

காம நோக்கு இருவர் பாலும் நிகழுமென்றே வள்ளுவரும் கூறியுள்ளார்.

"நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக் கணங்கு
தானைகொண் டன்ன துடைத்து"

(குறள் 1082)

என்று இருவர்பால் நிகழுவதாகவே காம நோக்கினை விளக்கியுள்ளார்.

இனிக் கம்பநாடாரும் "கண்ணிணை ஒன்றை ஒன்று கவ்வியுண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட "இராமனும் சீதையும் முதன்முதற் கண்டனர், காதலில் ஒன்றினர்" என்றார்.

ஆகவே இருவர்மாட்டும் நிகழ்வதை ஒருவர் மாட்டு நிகழ்வதாகிய கைக்கிளை என்றல் பொருந்தாது.

ஆனால், ஐயமும் தெளிவும் தலைவன் மாட்டே மட்டும் நிகழும். ஏனெனின் நாணும் மடனும் பெண்மையன. மேலும் பெண்ணுக்கு இவன் தெய்வமோ என்ன அச்சம். ஐயம் நிகழின் காமக் குறிப்புத் தோன்றா. ஆயினும் இருவர் மாட்டும் விடாது தொடர்ந்து வரும் காமக்குறிப்புகளையும் காமவிழைச்சினையும் மெய்ப்பாடுகளையும் காணலாம். பிறப்பே, குடிமை எனும் நூற்பாவில் 'நிறுத்த காமவாயில்' இருவர்மாட்டும் வேண்டும் என்றார் தொல்காப்பியர். அதாவது விடாது தொடர்ந்து வரும் அன்பும் பற்றும் பரிவும் இருவர் மாட்டும் வேண்டும்.

இனிக் குறிப்பறிவும் இருவர் மாட்டும் நிகழ்வதுவே.

"நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி யுரைக்கும் குறிப்புரை ஆகும்"

என்றார் தொல்காப்பியர். இங்கே 'நாட்டம் இரண்டும்' என்றது தலைமகன் கண்ணையும் தலைமகள் கண்ணையும் குறிக்கும்.

(3) ஒத்த காமக்கூட்டமாகிய களவொழுக்கத்தில் இயற்கைப் புணர்ச்சியைப் பற்றிக் கூறுங்கால், காட்சி, ஐயம், தெளிவு, குறிப்பறிவு ஆகியவற்றைக் கூறுகின்றார். ஆகவே இவை இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழும் நிமித்தங்களாகும். நிமித்தமாவன ஓர் ஒழுக்கத்திற்கு முன்னும் பின்னும் நிகழ்வன. அந்நிமித்தங்கள் ஒன்றை ஒன்று தொடுத்து வருவன; தொடர்புடையன. தனித்துக் காதலர் கண்டு காமங்கூர்தலும், கூர்ந்தபின் ஐயம் நிகழ்தலும், நிகழ்ந்தபின் ஐயம் தீர்தலும், தீர்ந்தபின் குறிப்பறிதலும் ஆகியவை ஒன்றை ஒன்று தொடர்ந்து நிகழும் நிமித்தங்களாகும்.

எனவே காட்சி முதலியன புணர்தல் நிமித்தங்களாவன; புணர்தற்கு முன் நிகழும் நிமித்தங்களாவன.

இதுகாறும் கூறியவற்றால் நாற்கவிராசர் அகத்திணைக் கைக்கிளை என வகுத்தமை தொல்காப்பியரது பண்டைய இலக்கண வழிக்கும் வகைக்கும் ஒவ்வாதது என்பதும், அது முன்னுக்குப் பின் முரணி அவரே கூறியது என்பதும், இவை நான்கும் களவியல்பாற்படுவதால் கைக்கிளையாகாமல் புணர்தல் நிமித்தங்களாகக் கொள்ளல் வேண்டும் என்பதும் ஒத்த காமக் கூட்டமாகிய ஐந்திணையுள்ளே ஒருதலைக் காமமாகிய கைக்கிளையடங்காதென்பதும் கண்டோம். ஆகவே, தொல்காப்பியர் வகுத்த நெறியே சீரிய செவ்விய ஒவ்விய நெறியெனக்கொள்க.

திணையாக வகுத்த ஒன்றனைத் துறைபோலப் பாவித்து, அதனை மற்றொரு திணையின்பாற்படுத்துவது பகுப்பு முறையாகாது. கைக்கிளைத்திணையைத் துறையாக்கி, அதனைக் குறிஞ்சித்திணையுட்படுத்தியது பகுப்புமுறை விதிக்கு முரணானது. இவ்வாறு திணையைத் துறையாக மாற்றி விரித்துரைப்பது அகப்பொருளிலோ புறப்பொரு

ளிலோ யாண்டும் காண்டல் அரிது. இதனை முன்னரே வற்புறுத்திச் சென்றுள்ளனர் பழம் பெரும் புலவர்கள்.

> "கைக்கிளை செந்திறம்
> பெருந்திணை நோந்திறம்
> அத்திணை இரண்டும்
> அகத்திணை மயங்காது
> அத்திணையானே யாத்தனர் புலவர்"

என்று அகத்திணைத் தூய்மையைப் புலவர் கூட்டம் விளக்கியுள்ளது.

'அளவில் இன்பக் கூட்டமாகிய' அகத்திணைக்குள்ளே கைக்கிளையும் பெருந்திணையும் மயங்குதல் கூடவே கூடாது என்று புலவர்கள் விலக்கி ஒதுக்கிச் சென்றுள்ளனர். பண்டைப் புலவர் பகுத்தறிவு நெறியை, உடன்பட்டே தொல்காப்பியரும் போற்றுகின்றார். அதற்கு முரணாக நம்பி அகப்பொருளில் வகுத்துப் பகுத்துக் கைக்கிளைத்திணையை இன்பக் கூட்டத்தினுள்ளே அமைத்தது பொருத்தமற்றதும், தூய்மையற்றதும் முரணிக் கூறுவதுமாகும். இவ்வாறு முரண்பட அமைத்தமைக்குச் சீரிய செவ்விய காரணம் எது எனத் தெரியவில்லை. ஆக, தொல்காப்பியர் பகுப்பும் குறியீட்டுப்பெயர் முறையுமே காரிய காரணமுறைக்கு ஒவ்வியதாகும்.

இனி, வாழ்க்கையிலே, நடைமுறையிலே, வேறுவிதமாகத் தாழ்ந்த ஒழுக்க நிலைகளும் தோன்றலாமல்லவா? காம உணர்வு நிறையாத ஓர் இளம் பெண்ணிடம் காதலுரைப்பதே கைக்கிளை எனத் தொல்காப்பியர் வரையறவு செய்தார். காமம் நிறையாத ஓர் இளம் காளையிடம் ஒரு பெண் காதலுரைப்பதோ, வயது முதிர்ந்தாளிடம் இளங்காளை காதலுரைப்பதோ, காமம் ஒழிந்த முதிர்ந்தானிடம் இளம் கன்னி காதலுரைப்பதோ எத்திணைப்பாற்படும்? இவற்றையும் கைக்கிளை எனக் கூறலாமோ? தொல்லாசிரியர் இவற்றை எத்திணையாகக் கூறிச் சென்றுள்ளனர்? என்ற வினாக்கள் எழுதல் இயல்பே.

இவற்றிற்கு விடை கூறுதற்கு முன் தொல்காப்பியர் வகுத்த கைக்கிளை இலக்கணம் யாவற்றையும் தொகுத்துக் காண்போம். அவ்விலக்கணத்திற்கு ஒத்தது எதுவாயினும் கைக்கிளையாகும். இன்றேல் பிறதிணைப்பாற்படும் என ஒதுக்கி விடலாம்.

1. கைக்கிளை ஆடவர்பால் மட்டும் நிகழ்வது.

2. அது சொல்லி இன்புறுகின்ற அளவிலே நிற்றல் வேண்டும். புணர்ச்சி முதலிய செயல்கள் கைக்கிளையாகா.

3. "புல்லித் தோன்றும் கைக்கிளை" என்று சூத்திரித்ததால் தலைவன் ஆண்மைக்குப் பொருந்தத் தோன்றுவது.

4. தலைவன் மாட்டு மட்டும் நிகழ்வதால் சிறுமை எனவும் கருதப்படுவது: ஆகவே நடுவண் அன்பின் ஐந் திணைப்பாற் படாது.

5. "கைக்கிளை செந்திறம். பெருந்திணை நோந்திறம்' எனப்படுவதால். கைக்கிளை இன்பந்தருவது, ஆனல் பெருந் திணை துன்பந் தருவதும் மிக்க இழிந்ததுமாகும். கைக்கிளை யிழிந்ததாகாது. அது தலைவன் மட்டும் சொல்லி இன்புறு வதால் ஒத்த காமநிலை யாகாதது என்று மட்டும் கொள் ளல் வேண்டும்.

இனி இவ்விலக்கண வரையறைஒழுக்கத்தை அடிப் படையாகக் கொண்டு முன்னர்க் கூறியன கைக்கிளையாகா வென எளிதில் கூறிவிடலாம்.

பெண்ணொருத்தி தலைவனையண்டித் தன் கழி பெருங் காமம் உரைப்பது பெண்மைக்கு இழுக்காகும். அச்சமும் மடனும் நாணுமுடைய பெண்மைக்குத் தன் நிறையழி காமமுரைத்தல் பொருந்தாது. ஆகவே இது இழிந்த நிலை யாகிய பெருந்திணைப்பாற்படும். எனவே பெண்பாற் கைக் கிளை என்றொரு பாகுபாடு வகுத்தல் கைக்கிளை இலக்கணத்திற்கு முரணானதாகும். ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர் உள்ளமா

னது உயர்ந்த ஒழுக்கம் கருதுவது. ஒழுக்க அடிப்படையிலேதான் திணைகளை வகுத்துள்ளனர். இதனைத் தெள்ளிதில் மனத்தில் கொள்ளாததால்தான் பிற்கால இலக்கண ஆசிரியர்கள் பிழைபட, முரண்பட இலக்கணம் வகுக்கத் தொடங்கினர். புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் பெண்பாற் கைக்கிளை என வகுத்து விரிக்க நேர்ந்தனவெல்லாம் தொல்காப்பியர் கண்ட உயர்ந்த நல்லொழுக்கப் பாகுபாட்டிற்கு முரணானவை.

காமவுணர்வு நீங்கிய முதியோளிடம் ஒருவன் தான் மிக்ககாம முரைப்பதும், காமவுணர்வு நிறையப்பெறாத ஓர் இளையோனிடமோ காமவுணர்வு கழிந்தொழிந்த முதியோனிடமோ ஒருத்தி கழிகாமம் உரைப்பதும் பெருந்திணையாகும். இவற்றைப் பெருந்திணை ஆராய்ச்சியில் விரிவாகக் காண்போம்.

மேலே கூறியவற்றிலிருந்து

"முன்னைய நான்கும் முன்னதற்கென்ப" (52)

"முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே" (14)

எனும் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர் கூறிய விளக்கங்கள் பொருந்தாமையை நன்குணரலாம். அவை பொருந்தாமையை நுண்மாண் புலவர் டாக்டர். சோமசுந்தர பாரதியார் தாமெழுதிய அகத்திணையியலிலும் இளவழகனார் செந்தமிழ்ச்செல்வியிலும் விளக்கி இருப்பதையும் கண்டு தெளிக.

தொல்காப்பியர் 'குறிப்பு' என்ற தொடரை இருதிணைகட்கு மட்டிலும் கூட்டிச் சொல்லுகின்றார். கைக்கிளைக் குறிப்பு என்றும் பெருந்திணைக் குறிப்பு என்றும் கூட்டிச் சொல்லிச் செல்லுகின்றார். ஆனால் ஐந்திணையைச் சுட்டுங்கால் குறிப்பு என்ற தொடரை யாண்டும் சுட்டவில்லை. எடுத்துக்காட்டாகக் குறிஞ்சித்திணைக்குறிப்பு என எவ்விடத்தும் சொல்லவில்லை. குறிப்பு என்ற சொற்குப் பொருள் என்ன?

வெளிப்படையல்லாதது குறிப்பு. ஆகவே இவ்விருதிணை யும் சிறப்பாகக் கூறுதற்குரியன வல்ல. திணை என்றால் ஒழுக்கம். இவற்றை ஒழுக்கம் எனக் கூறலாகாது; கைக்கொள்ளற்கு ஏற்றவை அல்ல. துறைகளாக, நிமித்தங்களாக விரித்துக் கூறுதற்கும் ஏற்றவை யல்ல. ஒழுக்க நெறியை இலக்கணங் கூறும்போதும் பரப்ப விழைந்த தொல்காப்பியர் வாழ்க்கைக்குதவாத, தகாதவற்றை விரித்துத்துறை வகுத்தல் ஒழுக்கமாகாது என ஒதுக்கினர். நிற்கத் தக்கவை கசடறக் கற்க, தீயவை உள்ளலும் தீது எனும் திருநெறிப் பற்றினாலே கைக்கிளை, பெருந்திணைக்குக்-குறிப்புகட்குத் துறைகள் விளக்காது, நிலம் பொழுதமைக்காது ஒதுக்கி னர். ஆனால் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் இவற்றிற்குப் படலம் அமைத்துத் துறைகளும் விளக்கினர். இல்லற இன்பம் பேரின்பத்திற்குத்துணையாக அமைதல் வேண்டும்.

''இகத்துள சுகத்திற்கு அளவுகோலாகிப்பரத்துள சுகத்தை வரித்த சித்திரமாய்'' விளங்குவது அகத்திணை என எண்ணியதாலே (மனோன்மணீயம்) இவ்விரு திணையும் விரிக்காது குறிப்பாகக் கூறிச்சென்ற நெறியே செந்நெறி எனக்கொள்ளுவோமாக.

தொல்காப்பியர் தூய நெறி வாழ்க!

சங்க நூற் சிறப்பு

மது. ச. விமலானந்தம் எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர்,
சரபோசி அரசர் கல்லூரி, தஞ்சாவூர்.

சங்க காலம்:

சங்கம் வைத்து மொழி வளர்த்த நாடு தமிழ் நாடு; இந் நாடு ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னர் முடியுடை மூவேந்த ரால் மாண்புடன் ஆளப்பட்டு வந்தது; ஆங்காங்கே குறுநில மன்னர் சிலரும் நல்லாட்சி செய்து வந்தனர்; இங்ஙனம் குறுநில மன்னரும் பெருநில மன்னரும் செங்கோலோச்சிச் சிறந்த நானிலய தமிழ்நாடு சங்க காலத் தமிழகம் என அழைக்கப்பெறும். அக்காலத்தே போரோ பூசலோ இன்றி மக்கள் அமைதியாக மண்ணில் நல்லவண்ணம் திகழ்ந்தனர்; வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தனர். செந்தமிழ் சிறந்தது; முத்தமிழ் முகிழ்ந்தது; கலைஞர் பலர் இயற்கையன்னையின் திருக்கோயிலை எழிலுறச் செய்தனர்; கலைக்கோயிலைக் கவி னுறச் செய்தனர். கவிமன்னரும் புவிமன்னரைப் போற்றிப் புகழ்ந்தனர்; காவலரும் பாவலரைப் பாராட்டிச் சிறந்தனர். கூடல் மாநகரில் கூடியிருந்து நாளும் இன்னிசையால் தமிழ் பாடி மகிழ்ந்தனர்.

சங்க நூல்கள்:

இன்னணம் பசியும் பிணியும் பகையும் நீங்க, வசியும் வளனும் நிலவ நல்லாட்சி புரிந்த நாளில் நல்லிசைப் புலவோர் எல்லோரும் எண்ணற்ற பாடல்களைப் பாடிக்குவித்தனர்; நூல் பல செய்து சிந்தை மகிழ்ந்தனர். உள்ளம் குளிர்ந்த போதெலாம் உவந்து பாடிய பாடல்களும், செய்த நூல்க ளும் காப்போர் இன்மையாலும், கயவர் சிலராலும் அழிந் தன, ஒழிந்தன; கனலும் புனலும் கவர்ந்தன பல; குறைந் தன சில; மறைந்தன சில; மறைக்கப்பட்டன பல; இறந்தன,

பல; எஞ்சியிருப்பன சிலவே. அவையே இன்று நாம் சங்க நூல்கள் என அழைக்கும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள் போன்றனவாகும்.

தோற்றமும் தொகுப்பும்:

தெள்ளு தமிழ்ப் பாக்களை அள்ளிப் பருகி அகமகிழ்ந்த நல்லிசைப் புலவோர் சிலர் அப்பாக்கள் அனைத்தும் குறைந்து மறைந்தும் வருதலைக் கண்டு உளம் வெதும்பினர்: உதிரியான பாக்கள் அனைத்தும் ஒன்றுபட்டால்தான் அவற்றிற்கு உண்டு வாழ்வென உணர்ந்தனர்; அங்ஙனம் ஒன்று திரட்டும் பொறுப்பும் பணியும் தமதெனத் தெளிந்தனர்; உள்ளம் உணரவே ஊக்கத்தோடும் உறுதியோடும் ஒன்று திரட்டினர்; அடியையே அளவாக, அகத்தையும் புறத்தையுமே எல்லையாக, பாவொப்புமையே வரம்பாகக் கொண்டு தொகை தொகையாக வகை செய்தனர். கவியரசர் கவிகளைத் திரட்டவே புவியரசரும் போற்றித் துணை நின்றனர்; இங்ஙனம் காவலர் போற்றப்பாவலர் தொகுத்தனவே இன்று நாம் காணும் எட்டுத்தொகையும் பத்துப் பாட்டுமாகும்.

பெருந்தேவனார் பெருந்தொண்டு:

பைந்தமிழ்ப் பாடல்களை நந்தமிழ்ப் புலவர்கள் வகுத்துத் தொகுத்த நூல்களுக்கெல்லாம் வாழ்த்துப்பாடும் வாய்ப்பினை ஏற்றார் பாரதம் பாடிய பெருந்தேவனார். ஏற்ற பொறுப்பை இனிதே முடித்தார். இங்ஙனம் பெருந்தேவனார் அருளிய கடவுள் வாழ்த்துக்களாகக் காணக்கிடப்பன: அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, ஐங்குறுநூறு, நற்றிணை ஆகிய ஐந்தும் அவரருளிய அருட்பாடல்களேயாகும். சிறப்பு சிலவுள: எம்மதமும் சம்மதமே என்ற முறையில் சைவத்திற்கும் வைணவத்திற்கும் சமவுரிமை தருகின்றார். ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு ஆகியவற்றில் சிவனையும், குறுந்தொகையில் முருகவேளையும், நற்றிணையில் திருமாலையும் ஏற்றிப் போற்றும் வகையிலே கடவுள்

வாழ்த்துப்பாடியுள்ளார்; அன்றியும் தொகை நூற்களின் அடியளவிற்குத்தகத் தாமும் அடிமுறையும் அளவும், பிற மாது வாழ்த்துக்களைப் பாடியுள்ளார் எனின் இவரது திறனை என்னென்பது? காட்டாக, 3 அடிமுதல் 5 அடி அளவினதாய ஐங்குறுநூற்றிற்கு மூன்றே அடிகளில் முருகக் கடவுளைப் பாடியுள்ளார்; அஃதே போன்று 13முதல் 31அடி அளவினையுடைய அகத்திற்கோர் அழகிய முகப்பாகப்பதினாறு அடிகளிலே முழுமுதற் கடவுளைப் பாடியுள்ளார். விவரம் வருமாறு :

அகநானூறு	— சிவன்	— 16 அடி
புறநானூறு	— ,,	— 13 ,,
ஐங்குறுநூறு	— ,,	— 3 ,,
குறுந்தொகை	— முருகன்	— 6 ,,
நற்றிணை	— திருமால்	— 7 ,,

பாட்டும் தொகையும்:

இதனால் சங்கப் பாடல்கள் தோன்றிய காலம் வேறு; தொகுக்கப் பெற்ற காலம் வேறு என்றறியலாம். தோன்றிய காலம் முதல் தொகுக்கப்பெற்ற காலம்வரை அமைந்த நல்ல பாடல்களின் தொகுதிகளே பாட்டும் தொகையுமாக அமைந்தன. (தொகுத்த காலமும் பாரதம் பாடிய பெருந்தேவனார் காலமும் ஒன்றாகலாம்; இன்றேல் பெருந்தேவனார் காலத்திற்குச் சிறிது முன்னர் தொகுக்கப்பட்டிருக்கலாம்) ''பாட்டும் தொகையும்'' என்ற வழக்கு உரையாசிரியர்கள் காலத்திலேயே வழங்கிவந்தமை கண்கூடு. இப்பெயர் முதன் முதலில் காணப்பெறுவது நன்னூல் சூத். 387 மயிலைநாதர் உரையில் என்க. இதுவன்றி.

பாட்டினுந் தொகையினும் வருமாறு கண்டுகொள்க
பாட்டினுந் தொகையினும்...... (செய். 50)
பாட்டினுந் தொகையினும் உள்ள சொல்லே (செய். 80)
பாட்டுந் தொகையும் அல்லாதன சில நாட்டிக்கொண்டு (மரபு 94)

என வரும் தொல்காப்பிய–பேராசிரியர் உரையிலும் உணரலாம். இனி, பாட்டு பத்து என்பதும், தொகை எட்டு என்பதும் எங்ஙனம் அறிதுமெனில், 'ஐம்பெருங்காப்பியம், எண் பெருந்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க் கணக்கு என்னும் இவ்விலக்கியங்களுள்ளும் விரிந்த உரிச்சொற் பனுவல்களுள்ளும் உரைத்தவாறு அறிந்து வழங்குக' என்னும் நன்னூல் மயிலைநாதர் உரையால் அறியலாம் என்க.

சங்கப் பாடல்களின் தொகை 2381; பாடிய புலவர்கள் தொகை 473; பெயர் தெரியாத புலவர்கள் 102.

எட்டுத்தொகை;

தொகை என்னும் வழக்கு உரையாசிரியர் பல்லோரால் பயிலப்படுவது. உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க்கினியர்,

'தொகையினுங் கீழ்க்கணக்குகளினும் இம்முறைமயங்கி வரக் கோத்தவாறு காண்க' (தொல் – அகத்திணையியல்–சூ 6) 'தொகைகளிலுங் கீழ்க்கணக்கிலும் உள்ள கடவுள் வாழ்த்தெல்லாம் இதன்கண் அடக்குக' (தொல்–புறத்திணை இயல் சூ-26)

என உரை எழுதுங்காலை தொகை நூல்களைச் சுட்டிச்செல்வது காண்க. இனித் தொகை நூல்கள் இன்னின்ன என்பதைக் கீழ்வரும் பழம்பாட்டால் அறியலாம்:

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறமென்று
இத்திறத்த 'எட்டுத் தொகை'.

இவ்வெட்டனுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஐந்தும் அகப்பொருள் பற்றியன; பதிற்றுப் பத்து, புறநானூறு இரண்டும்புறப்பொருள் பற்றியன; பரிபாடல் அகம் புறம் இரண்டும் இணைந்த இனிய பனுவல். இந்நூற்பாக்கள் அனைத்தையும் நானூறுக்கும் மேற்பட்ட புலவர்கள் பாடியுள்ளனர். கலி, பரிபா

டல் இரண்டும் நீங்க ஏனைய ஆறும் அகவற் பாவால் அமைந் தவை; கலித்தொகை கலிப்பாவாலும், பரிபாடல் பரிபாட் டாலும் யாக்கப்பெற்றவை. நற்றிணை, குறுந்தொகை, அகம், புறம் நான்கும் நானூறு நானூறு பாடல்களைக் கொண் டவை; கலித்தொகை 150 பாடல்களை உடையது; பதிற்றுப் பத்தில் முதற் பத்தும் இறுதிப் பத்தும் கிடைத்தில; பரி பாடலில் 22 பாடல்களே கிடைத்துள்ளன. (பிற விவரங் கட்குப் பட்டியல் I பார்க்க)

பத்துப்பாட்டு:

பாட்டு என்பதும் உரைகாரர்களால் அழைக்கப்பெற்ற ஒன்றே. தொல்காப்பிய செய்யுளியல் 50, 80 சூத்திரங்களுக் குப் பேராசிரியர் எழுதும் உரையில் பன்முறை பாட்டு எனக் குறிக்கப்பட்டுளது. இனி, பத்துப்பாட்டு இவையென அறிதும்:

> முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
> பெருகு வளமதுரைக் காஞ்சி — மருவினிய
> கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
> பாலை கடாத்தொடும் பத்து.

என்பது பழம்பாடல். இப்பத்து பாடல்களையும் எட்டு புல வர்கள் யாத்துள்ளனர். ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் பாடிய புலவர் பெயரும், பாட்டுடைத் தலைவர் பெயரும் குறிக்கப் பெற்றுள்ளன முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை மூன்றும் அகத்திணை பற்றியன; ஆற்றுப் படைகள் ஐந்தும், மதுரைக் காஞ்சியும் ஆக ஆறும் புறத் திணை பற்றியன; நெடுநல்வாடை அகம் பற்றியது எனச் சிலரும், புறம் பற்றியது எனச் சிலரும், அகமும் புறமும் இணைந்த ஒன்று எனச் சிலரும் சாற்றுவர். திருமுருகாற் றுப்படை, நெடுநல்வாடை இரண்டையும் யாத்தவர் நக்கீ ரர்; பெரும் பாணாற்றுப் படையையும், பட்டினப் பாலையை யும் இயற்றியவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார். பொரு நராற்றுப் படையும், பட்டினப் பாலையும் சோழன் கரிகால

னையும், மதுரைக் காஞ்சியும், நெடுநல்வாடையும் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனையும் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டவை. முல்லைப்பாட்டின் பாட்டுடைத் தலைவன் யாரெனத் திட்டவட்டமாகத் தெரிந்திலது. அனைத்துப் பாடல்களும் அகவற் பாவால் ஆனவை. இதனை அடுத்துவரும் சூத்திரங்களால் தெளியலாம்.

நூறடிச் சிறுமை நூற்றுப்பத் தளவே
ஏறிய அடியின் ஈரைம் பாட்டுத்
தொகுப்பது பத்துப் பாட்டெனப் படுமே. (பன்னிருபாட்டியல் 384,
ஆசிரியப் பாட்டின் அளவிற் கெல்லை
ஆயிரம் ஆகும் இழிபு மூன்றடியே. (தொல்-செய்யுளியல் 150)
அதுவே, அகவலின் வருமென அறைகுவர் புலவர் (பன்னிரு-385)

பத்து பாடல்களிலும் அளவால் சிறியது முல்லைப்பாட்டு; 301 அடிகளை உடையது. அளவால் பெரியது மதுரைக் காஞ்சி; 782 அடிகளைக் கொண்டது. (பட்டியல் II கண்டு பிறவற்றை அறிக)

குறள்:

பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் சேர்ந்து பதினெண் மேற்கணக்கு என அழைக்கப்பெறும்; இதனைப் போன்றே 18 நூல்களைக்கொண்டது பதினெண் கீழ்க் கணக்கு எனப்படும். இதன்கண் திருக்குறள் தவிர ஏனைய பிற்காலத்திலும், சங்கம் மருவிய காலத்திலும் தோன்றியனவாகும். சங்கநூல் என அழைத்தற்குரியது எப்பாலவரும் போற்றும் முப்பாலே; இதனது காலம் கி, மு. 30 எனக் கூறுவார் மறைமலையடிகளார். எனவே சங்க நூல்கள் என அழைக்கத் தக்கன எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள் ஆகியனவே. இச்சங்க நூல்களுக்கெல்லாம் முந்திய இலக்கண நூல் ஒல்காப்புகழ் தொல்காப்பியமாகும்.

இதுகாறும் கண்டவற்றால், சங்ககாலம் இன்னதென்றும், சங்க நூல்கள் தோன்றிய–தொகுக்கப்பெற்ற வரலாறு இஃதென்றும். சங்க நூல்கள் என அழைக்கப்பெறும் சிறப்பின இவை எனவும் விரிவாகக் கண்டோம். இனி வரும் இதழ்களில் சங்க நூல்களுக்கென அமைந்த தனிச் சிறப்பியல்புகளைக் காண்போம்,

(வளரும்)

எண்	நூலின் பெயர்	அடியளவு	புலவர்கள்	தொகுத்தோர்	தொகுப்பித்தோர்
1	நற்றிணை	9—12	175	தெரிந்திலது	பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி
2	குறுந்தொகை	4— 8	205	தெரிந்திலது	பூரிக்கோ
3	ஐங்குறுநூறு	3— 6	5	கூடலூர் கிழார்	யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை
4	பதிற்றுப்பத்து	8—57	10	தெரிந்திலது	தெரிந்திலது
5	பரிபாடல்	32—140	2	தெரிந்திலது	தெரிந்திலது
6	கலித்தொகை	15—80	5	நல்லந்துவனார்	தெரிந்திலது
7	அகநானூறு	13—31	145	உருத்திரசன்மனார்	உக்கிர பெருவழுதி
8	புறநானூறு	4—40	160	தெரிந்திலது	தெரிந்திலது

எண்	நூலின் பெயர்	அடியளவு	பாடினோர்	பாடப்பட்டோர்	வெண்பா
1	திருமுருகாற்றுப்படை[1] புலவராற்றுப்படை	317	நக்கீரர்[1]	முருகக்கடவுள்	10
2	பொருநராற்றுப்படை[2]	248	முடத்தாமக்கண்ணியார்	கரிகாற்பெருவளத்தான்[1]	3
3	சிறுபாணாற்றுப்படை[3]	269	நல்லூர் நத்தத்தனார்	நல்லியக்கோடன்	2
4	பெரும்பாணாற்றுப்படை[4]	500	உருத்திரங் கண்ணனார்[1]	தொண்டைமான் இளந்திரையன்	1
5	முல்லைப்பாட்டு	103*	நப்பூதனார்	— — —	2
6	மதுரைக் காஞ்சி	782*	மாங்குடி மருதனார்	பாண்டியன்நெடுஞ்செழியன்[1]	2
7	நெடுநல்வாடை	188	நக்கீரர்[2]	பாண்டியன்நெடுஞ்செழியன்[2]	1
8	குறிஞ்சிப் பாட்டு	261	கபிலர்	ஆரிய அரசன் பிரகதத்தனுக்காக	2
9	பட்டினப் பாலை	301	உருத்திரங்கண்ணனார்[2]	கரிகாற்பெருவளத்தான்[2]	1
10	மலைபடுகடாம் கூத்தராற்றுப்படை[5]	583	பெருங்கௌசிகனார்	நன்னன் சேய் நன்னன்	1

உலகச் சமயங்கள்

(கி. பழநியப்பன், மதுரை)

---

5. கிறித்துவ சமயம் (*211-ஆம்பக்கத் தொடர்ச்சி*)

மேசையா விரைவில் தோன்றப்போகின்றார் என்று சான் கூறிய சொற்கள் ஏசுவின் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருந்தன. உள்ளம் அதையே சிந்தித்துக்கொண்டிருந்தது. மேலும் அதைப்பற்றிச் சிந்திக்க எண்ணிய ஏசு சூதாநாட்டுப் பாலைவனத்தின் தனிமையை நாடிச்சென்றார். ஆண்டவனை வழிபடுதல், மேசையாவைப்பற்றிச் சிந்தித்தல் ஆகிய இரண்டையும் மேற்கொண்டு நாற்பதுநாட்கள் ஏசு அப்பாலைவனத்தில் தவமிருந்தார் நாற்பதுநாட்கள்கழித்து ஏசு தம்வீடு திரும்பும்பொழுது அவரது எண்ணமெல்லாம் மனிதர்களிடையே உடன்பிறந்தோர்உறவும் நீதியும் அமைதியும் பரவவேண்டுமென்பதாகவே இருந்தன. அவ்வமயம் செருசலத்தில் பெருவிழா நடக்கும் காலமாக இருந்தபடியால் ஏசுவும் அங்குச் சென்றார். செருசலத்தில் ஆண்டவன் கோவிலில் தாம் சிறுவனாக இருந்தபொழுது கண்ட காட்சிகளையே ஏசு அன்றும் கண்டார். பலிகொடுப்பதற்கான ஆடு மாடுகளின் கூட்டங்களும் பணம் மாற்றுவோர் கூட்டங்களும் கோவிலின் சூழ்நிலையைத் தூய்மையற்றதாக்கி அமைதியைக் கெடுத்துக் கொண்டிருந்தன. அவைகளைக் கண்ட ஏசுவின் மனம் நிலைகுலைந்து துடிதுடித்தது. அருகில் கிடந்த ஒரு சாட்டையை எடுத்தார்; ஆடுமாடுகளை அடித்து விரட்டினார்; காசுக்கடைகளை எட்டி உதைத்தார். அதைக்கண்டு கூச்சல் கிளம்பியது. ஏசு அஞ்சாது உரத்தகுரலில் " ஆண்டவன் கோவிலைச் சந்தைக் கடையாக்காதீர்கள்! எல்லாவற்றையும் வெளியே எடுத்துச் செல்லுங்கள் " என்று ஆணையிட்டார். ஏசுவின்அச்செயல் கோவில் பூசாரிகளுக்குப் பெரும் வேதனையைக் கொடுத்தது. கோவிலில் வணிகர்களுக்கு இடம் கொடுத்தவர்கள் அவர்

களே. அவர்களுடைய உரிமையை ஏசுவின் செயல் பறித்து விட்டதே என்று கோபங்கொண்டனர். இத்துணிவுச் செயல் ஏசுவிற்குச்சில பகைவரைத் தோற்றுவித்ததென்ரு லும் பல நண்பர்களையும் உண்டுபண்ணிற்று.

பெருவிழா முடிந்து திரும்பிய ஏசு நாசரத்திலும் காளு விலும் தம்கருத்தை மக்களுக்கு எடுத்து விளக்க ஆரம்பித் தார், சமயத்தின் அடிப்படை இதயத்திலிருந்து தோன்று வதாக இருக்கவேண்டுமென்று சொல்லிவந்தார், அப்பகு தியிலுள்ள மக்கள் ஏசுவின் தாய் தந்தையரையும் உடன் பிறந்தவர்களையும் அவரையும் சிறுவயதிலிருந்தே அறிந்தவர் களானபடியால் அவருடைய பேச்சில் அதிக அக்கரை காட் டாது 'ஏசு எவ்வாறு பெரிய அறிவாளியாளுன்' என்று நகையாடினர், பிறந்து வளர்ந்த ஊரில் அறிஞர்கள் மதிக் கப்படார்கள் என்பது வரலாறு கூறும் உண்மையாகும். ஆகவே ஏசு சிலநாட்களில் நாசரத்தைவிட்டுக் கலிலே ஏரிக் கரையிலுள்ள காப்பர்நாம் எனும் கிராமத்திற்குச் சென்ருர். அங்குப் பீட்டர்,ஆண்ரூ என்ற இரு செம்படவர்கள் ஏசுவை வரவேற்று, எதிர்பார்க்கும் மேசையா அவரேயென்று நம்பி னர். ஏசு வாழ்வதற்கு வேண்டிய வசதிகளை அவர்கள் செய்து கொடுத்தனர்'. ஏசு அடிக்கடிக் கடற்கரைக்குச் சென்று அங்குக் கூடியுள்ள செம்படவர்களுக்கு அறவுரை நிகழ்த்தி வருவது வழக்கம். சிறிது சிறிதாக அவருடைய புகழ் காப்பர்நாம் முழுவதும் பரவியது. கூட்டங் கூட்ட மாக மக்கள் அவர் அறவுரைகளைக் கேட்கவந்தனர், சிறிது காலத்திற்குள் அவரைப்பற்றிய பலப்பல அதிசயக் கதை கள் தோன்றி நாடு முழுவதும் அவரது புகழ் பரவிவிட்டது. ஒரு சமயம் நாடு முழுவதிலிருந்தும் பெருங்கூட்டம் திரண்டு வந்து காப்பர்நாம் அருகில் உள்ள ஒரு மலையடிவாரத்தில் கூடி ஏசுவைக் காண்பதற்கும் அவருடைய அறவுரைகளைக் கேட்பதற்கும் காத்திருந்தது. அவ்வமயம் ஏசு கூறிய சொற் கள் மிக மிக முக்கியம் வாய்ந்ததாகும். அதுவே "மலையில் மொழிந்த நல்லுரை" என வழங்கப்படும்;

பேறுபெற்றோர்—உணர்ச்சியில் சிறியோரே!
ஏனெனில், அவர்களே அடைவர் வானுலக அரசு.
பேறுபெற்றோர்—அமைதியுடன் வாழ்வோரே!
ஏனெனில், அவர்களே பெறுவர் உலக உரிமை.
பேறுபெற்றோர்—துன்பக் கண்ணீர் வடிப்போரே!
ஏனெனில், அவர்களே பெறுவர் இன்பம்.
பேறுபெற்றோர்—நல்வழிநின்று வறுமையுற்றோரே!
ஏனெனில், அவர்களே பெறுவர் நிறைவு.
பேறுபெற்றோர்—கருணை மிக்கோரே!
ஏனெனில், அவர்களே பெறுவர் கருணை.
பேறுபெற்றோர்—தூய்மை இதயம் உடையோரே!
ஏனெனில், அவர்களே காண்பர் கடவுளை.
பேறுபெற்றோர்—அமைதியை ஆக்குவோரே!
ஏனெனில், அவர்களே ஆண்டவன் குழந்தைகள்.
பேறுபெற்றோர்—நற்செயலுக்காகத் துன்புறுத்தப்படுவோரே!
ஏனெனில், அவர்களே அடைவர் வானுலக அரசு.

யூதர் மதம் சட்டதிட்டங்களைக் கற்பித்தது. ஏசு அன்பு வழியைக் காட்டினார். ஏசுவைப் பின்பற்றுவோர் எண்ணிக்கை நாளுக்குநாள் வளர்ந்து கொண்டிருந்தது. தம்மைப் பின்பற்றுவோர்களிலிருந்து திறமை வாய்ந்த பன்னிரண்டு பேர்களை ஏசு தேர்ந்தெடுத்தார். நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று தம் புதிய கோட்பாடுகளை எடுத்துக் கூறும் போதகர்களாக ஏசு அவர்களை அனுப்பி வைத்தார்.

போதகர்கள் நாடெங்கும் சென்று "மனித இனத்தை உய்விக்கவந்த மகான் தோன்றிவிட்டார், அவரே ஏசு எனப் படுவர்" என்று கூறி அவரது அரிய போதனைகளை விளக்கினார்கள். போதகர்கள் உரையைக்கேட்டு மக்கள் திரள் திரளாக ஏசுவைக் காண்பதற்காகக் காப்பர்நாமிற்கு வந்தனர். உடல்நோய்களைத் தீர்ப்பதிலும் ஏசு வல்லுநர் எனக் கருதி ஏராளமான நோயாளிகளும் அவரை நாடி வந்தனர். எங்குச் சென்றாலும் அவரைப் பின்தொடர்ந்து

நூற்றுக்கணக்கான மக்கள் சென்றனர். பல நாட்கள் அவருக்கு உணவு உட்கொள்ளவும் நேரம் இடைப்பது அரிதாகிவிட்டது.

சோர்டான் நதிக்கரையில் மக்களுக்குப் புனித நீராட்டிப் போதித்துக்கொண்டிருந்த சான் ஒரு சமயம் ஈராட் மன்னனின் மகனான ஈராட் அண்டிபாசின் கொடுமைகளைக் கண்டித்துப் பேசிவிட்டார். மன்னன் சினங்கொண்டான். சானுக்கு மரணதண்டனை விதித்தான். இவ்வாறு தம் உறவினரான சான் மாண்டதைக் கேட்ட ஏசு மிக வருந்தினார். அவர் வாழ்க்கையில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. முதல் முதலாக சானைச்சோர்டான் நதிக்கரையில் ஏசு கண்டபொழுது அவர் வாழ்க்கையில் முதலாவது மாறுதல் ஏற்பட்டது. இப்பொழுது சானின் மரணம் இரண்டாவது மாறுதலை ஏற்படுத்தியது. சூதா நாட்டில் போதனை செய்ததற்காகச் சான் கொல்லப்பட்டார். சூதா நாடு எதிரிகளின் கோட்டை. அங்குச் சென்று போரிடுவதுதான் சிறந்தது என்று ஏசு கருதினார். அங்குச் செல்லத்திட்டமிட்டு முதலில் செருசலத்திற்குச் சென்றார். ஏசுவின் வருகையை அறிந்த செருசலக் கோவில் பூசாரிகள் அவருக்கு விரோதமாகச் சதி செய்யத் தொடங்கினர்.

அக்காலச் சமயத் தலைவர்களே ஏசுவின் பெரும் பகைவர்களாக இருந்தனர். அவர்கள் மக்களிடையே கூறி வந்த சமயக் கருத்துக்களுக்கு முற்றும் மாறுபட்டதாக ஏசு கூறி வந்தார். ரோமாபுரி ஆட்சிக்கு உட்பட்ட அந்நாட்டில் நல்ல விதியொன்றைப் பின்பற்றிவந்தனர். அதாவது எவ்விதமான சமயக்கொள்கைகளையும் யாரும் போதிப்பதற்கு உரிமை கொடுக்கப்பெற்றிருந்தது. நாத்திக போதனையும் அரசிற்கு எதிரான போதனைகளுமே தடை செய்யப்பட்ட செயல்களாக இருந்தன. ஆகவே ஏசு இவ்விரண்டு குற்றங்களில் ஒன்றைச் செய்ததாக வெளிப்படுத்தி அரச தண்டனைக்கு உள்ளாக்க வேண்டுமென்று பகைவர்கள் திட்டமிட்

டனர். ஏசு ஆண்டவனைக் குறைகூறுபவர் என்று எளிதில் காட்டிவிடலாமென்று அவரை அணுகிப் பலகேள்விகள் கேட்டனர். அதில் முதற் கட்டளை யாது? என்பது ஒன்று. அதற்கு ஏசு கொடுத்த பதில் இதுவேயாகும்:

ஓ! யூதர்களே! உரைப்பேன் கேளீர்!
ஒன்றே கடவுள் ஒருவனே ஆண்டவன்
என்பதே கட்டளை என்பதை யுணர்வீர்.

இரண்டாம் கட்டளை:

தனக்கு ஒப்பாம் தன்மையில் காட்டுக
அன்பை, அண்டை அயலோரிடமும்.

இவ்வாறு ஒவ்வொன்றிற்கும் ஏசு தக்க விடையளித்து வந்தார். பகைவர்கள் எண்ணியபடி ஆண்டவனைக் குறைகூறும் சொற்கள் ஒன்றும் அவர் சொல்லவில்லை. அதைக் கண்டு அவர்கள் ஏமாற்றமே யுற்றனர். அவர்களுடைய சமயக் கோட்பாடுகளைக் கண்டித்தார். இதயத்திலிருந்து தோன்றாத சமயம் வேரற்ற மரமாகும் என்றார்.

செருசலத்துப் பெருவிழாவிற்கு மூன்றாண்டுகளுக்கு முன் ஏசு தனியாக வந்து கோவிலில் பரபரப்பை உண்டு பண்ணினார். இப்பொழுது அவ்விழாவிற்கு ஏசு தம்முடன் சேர்ந்தவர்கள் பலரையும் அழைத்துக்கொண்டுவந்தார். அவர்கள் தெருவெல்லாம்' வழிகாட்டி ஏசு வாழ்க' என்று வாழ்த்துப் பாடிக்கொண்டே சென்றனர். கோவில் முற்றத்தில் முன்போலவே சந்தைக்கூட்டம் அமைதியைக் கெடுத்துக்கொண்டிருப்பதை ஏசு பார்த்தார். எல்லோரையும் முன்பு செய்ததுபோலவே வெளியேற்றினார். ஏசுவுடன் இச்செயலில் பலர் ஈடுபட்டிருப்பதைக் கண்டு பூசாரிகள் மிகவும் கலக்கம் கொண்டனர். ஏசுவின் போதனைகளையும் செயல்களையும் நீடிக்கவிட்டால் தங்கள் இனத்திற்கும் சமூகத்திற்கும் தீங்கு நேரிடும் என்று கருதிப் பூசாரிகள் அனைவரும் ஒன்றுகூடிச் சிந்திக்கலாயினர். மறுநாட் காலை ஏசு

செருசலத்தைவிட்டுப் பன்னிரண்டுகல் தொலேவிலுள்ள பீதானி என்னும் ஊருக்குத் தம்முடைய சீடர்களுடன் சென்றுவிட்டார். தம்முடைய போதனையும் செயலும் பூசாரிகளுக்கும் மற்றுமனேகர்களுக்கும் கோபத்தை மூட்டியுளது என்பதை நன்ருக ஏசு உணர்ந்து அவர்களால் தமக்குத் தீங்கு ஏற்படலாம் என்று கருதினர். தம் உறவினர் சானுக்கு ஏற்பட்ட கதியை எண்ணினர். அன்று பல தடவை அவருடைய சீடர்களிடம் தமக்கு முடிவு நெருங்கி விட்டதாகக் கூறினர்; (வளரும்)

கடவுள் வாழ்த்து

(திருக்குறள் கடவுள் வாழ்த்துக் கருத்துகள் அமைந்த எண்சீர் விருத்தம்)

உலகிற்கு முதல்வனே ஆதியாம் பகவனே
உண்மைவா லறிவனே கல்வியின் பயனே
மலர்மிசையே குவோனே விருப்பும் வெறுப்பு
மற்ருேனே இருள்சேர் விணசே ரானே
புலன்களைந்தை யுமவித் தோனே யொப்பிலாப்
புகழோனே நல்லற வாழியந் தணனே
நிலவியவெண் குணனே! பிறவிப் பெருங்கடல்
நீந்திடவே யெமக்கு நீயருள் புரிகவே.

— கி. பழநியப்பன்

தொல்காப்பியத்திற் சில வழக்காறுகள்

[வித்துவான். கு. மா. திருநாவுக்கரசு]

(220 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனி, உரையாசிரியர்கள் கூறும் மரப்பெயர்களைக் காண்போம்.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கூறுவன

1. காயா. ஆரை. நுரை.
2. கூதாளி, கணவிரி, பருத்தி, கள்ளி.
3. கடு.
4. கழஉ, பழஉ.
5. ஆத்துணை, வழுதுணை, தில்லை, புன்னை, வழை, கழை. கலை.
6. வேய்.
7. குதிர், துவர்.
8. உசில், எலியால்,
9. மகிழ்.
10. முள்.
11. தெங்கு.

நச்சினார்க்கினியர் மேலும் சில கூறுகின்றார். அவை யாவன:—

1. அமை, தாழை, உடை, காரை, ஓலை.
2. வலர், அயிர், சிவிர்.
3. உதள்.
4. புடோல்.
5. கடுகு, கடம்பு, ஈஞ்சு, கோங்கு, வேம்பு.

* * *

இனி, தொல்காப்பியர் (எழுத்ததிகாரத்துள்) கூறும் விலங்குப் பெயர்கள்:—

ஆ,	225, 232
மா	233, 234
சே	280
மீன்	340

❊ ❊ ❊

உரையாசிரியர்கள் கூறும் விலங்குப் பெயர்கள்:—

ஆ	நாய்
மூங்கா	செந்நாய்
புலி	தகர்
கீரி	
எவ்வி	கேழல்
பன்றி	யாடு
உசு	முயிறு
முசு	குரங்கு
யானை	
கெண்டை	
குதிரை	
மஞ்ஞை	
தத்தை	
கலை	

தொல்காப்பியர் கூறும் பறவைப் பெயர்கள்.

எகின்	338
புள்	404

❊ ❊ ❊

பசு என்பது ஆரியச் சிதைவென்பர் உரையாசிரியர்கள்,

உரையாசிரியர்கள் கூறுவன :—

ஈ
தாரா
கிளி
குரீ
நாரை
காக்கை
பூழ்
சுரும்பு
வண்டு
கொக்கு

* * *

திங்கட் பெயர்கள்

தொல்காப்பியர் திங்கட்பெயர்களை விதந்து கூறுமல் அவற்றை இகரவீற்றிலும் ஐகாரவீற்றிலும் அடக்கிக் கூறியுள்ளார். எனவே இப்பொழுது வழங்கிவரும் திங்கட் பெயர்கள் யாவும் இவ்விரு ஈற்றிலுமே யடங்கியுள்ளன என்பதை யுணரும்போது இவையே அவர்காலத்திலும் அதற்கு முன்னும் வழங்கிவந்தன என்றறிகின்றேம்,

இகரவீற்றுத் திங்கட்பெயர்கள்.

1. வைகாசி 2. ஆனி
3. ஆடி* 4. ஆவணி
5. புரட்டாசி 6. ஐப்பசி
7. மார்கழி 8. மாசி
9. பங்குனி (249)

ஐகாரவீற்றுத் திங்கட்பெயர்கள்.

1. சித்திரை*
2. கார்த்திகை
3. தை

} 287

* இவை உரையாசிரியர்கள் காட்டுவன. ஏனையன ஒப்புமைகருதி இங்கு எடுத்தாளப்பட்டுள்ளன.

நாட்பெயர்கள்.

தொல்காப்பியர் நாட்பெயர்களையும் விதந்து கூருமல் இகரம், ஐகாரம், மகரம் ஆகிய மூன்று ஈறுகளில் மட்டும் அடக்கிக் கூறியுள்ளார். இப்பொழுது வழக்கிலுள்ள அசுவினி முதலிய இருபத்தேழு பெயர்களும் இம்மூன்றீறு களிலேயே அடங்கியுள்ளன என்ருலும் இவை தமிழ்ச்சொற் களா என்பது சிந்தித்தற்குரியது. உரையாசிரியர்கள் ஒவ் வோர் ஈற்றிற்கும் (இப்பொழுது வழக்கிலுள்ள) ஒவ்வொரு பெயரை மேற்கோளாகக் காட்டியுள்ளார்கள். அவை:-

1. **இகர வீறு**

பரணி 248

2. **ஐகார வீறு**

கேட்டை 287

3. **மகர வீறு**

மகம் 332

* * *

உணவுப் பெயர்கள்

1. எண்* 309
2. நெல் 372

உரையாசிரியர்கள் கூறுவன :—

தினை
உப்பு
வரகு
கூழ்
சோறு
தயிர்
பாளிதம்

---

* இஃது இக்காலத்து எள் என வழங்கப்படுகின்றது.

தொழிற் பெயர்கள்

தொல்காப்பியர் ஞ், ண், ந், ம், ன், ல், ள் ஆகிய ஏழு மெய்களை ஈற்றிலே உடைய சொற்கள் தொழிற்பெயர்களாக வரும் என்று கூறியுள்ளார். அவற்றிற்கு உரையாசிரியர்கள் மேற்கோளாகச் சில தொழிற்பெயர்களைத் தந்துள்ளார்கள். அவை :—

1.	ஞகாரம்	உரிஞ்	297
2.	நகாரம்	பொருந்	291
		வெரிந்	301
3.	ணகாரம்	மண்	307
		முரண்	310
4.	மகாரம்	செம் (நாட்டம்)	283
5.	னகாரம்	மின் * பின் * பன் * கன் *	346 346
6.	லகாரம்	கல் (பின்னல்) (கன்னல்)	377
7.	ளகாரம்	துள் (வாள்) (கோள்)	402

* இவை நூலாசிரியர் கூறுபவை.

வாள் = கொல்லுதல் என்னும் பொருட்டு.

மேலே கூறிய தொழிற்பெயர்களில் ( ) அடைப்புக் குறியிலுள்ளனபோக எஞ்சியன யாவும் வருமொழியோடு புணருங்காலை உகரச்சாரியையும் வல்லெழுத்தும் மிக்கு வரும் என்பது விதி.

மேற்கோள் = 'உரிஞுக்கடிது'

இத்தொழிற் பெயர்கள் பெறும் புணர்ச்சி விதியைத் தொழிற்பெயர்களல்லாத பொருட்பெயர்களும் பெறும் என்று கூறுகின்றார் நூலாசிரியர். அவையாவன:—

1. ஈம், கம், உரும் — 329, 330

2. மின், பின், பன், கன் * = 346, 347.

3. வல் 374.

4. தெவ் 383.

5. புள், வள் 404.

6. மண் + } வெண் } எண் } 307.

* இவை தொழிற்பெயர்ப்பொருளையும் பொருட்பெயர்ப் பொருளையு முணர்த்தும்.

+ இவை உரையாசிரியர்கள் கூறுவன:

[வளரும்]

மதிப்புரை

நவமணிகள்

ஆக்கியோர்: T. S. வைத்தியநாதன் அவர்கள்,
வெளியீடு: திருவாவடுதுறை ஆதீனம்.

'நவமணிகள்' என்னும் பெயரைத் தாங்கிய இந்நூல் திருவாவடுதுறை ஆதீனத்தின் நூற்றிருபத்தெட்டாவது வெளியீடாக வந்துள்ளது. சமயம், இலக்கியம், இலக்கணம் முதலிய பல துறைகளில் திருவாவடுதுறை ஆதீனம் செயற்கரிய பல தொண்டுகளைச் செய்து வருவது யாவருமறிந்த தொன்றும். இத்துடன் பொருட்டுறையில் தமிழில் முதன் முதலாக இந்நூலை வெளியிட்டுப் பெருந்தொண்டு புரிந்துள்ள ஆதீனத்திற்குத் தமிழுலகம் என்றும் கடமைப் பட்டுள்ளது.

இந்நூலையியற்றிய ஆசிரியர் T. S. வைத்தியநாதன் அவர்கள் ஒரு பல்கலைக் குரிசில் என்பது இதனை நன்கு படித்தோருக்குப் புலனும். அவர் தமது வாழ்நாட்கள் முழுவதும் உழைத்த உழைப்பின் பயனே இன்று 'நவமணிகள்' என்னும் நூல் வடிவில் வந்துள்ளது.

தமிழிலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் சிதறிக் கிடக்கும் வைரம், முத்து முதலிய ஒன்பது மணிகளைப்பற்றி ஒருங்கே அறிந்து கொள்ளுமாறு ஒரு நூல் இதுவரை வெளி வந்ததில்லை. இதன் ஆசிரியர் அவையெல்லாவற்றையும் தொகுத்து அவற்றின் குணநலன்கள், வடிவமைப்புக்கள், அவற்றில் காணப்படும் குற்றங்கள் முதலியவற்றைத் தெளிவாக விளக்கியுள்ளார். அதுமட்டுமன்றி இவைபற்றி மேனாட்டாராய்ச்சியாளர்களும் வரலாற்றாசிரியர்களும் செய்துள்ள திறனாய்வும், இம்மணிகளைக் கொண்டு அறியத்தக்க பல்வேறு நாடுகளின் வரலாறுகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இந்நாலின்மூலம் பல புதிய கருத்துக்களையும், வியக்கத்தக்க நிகழ்ச்சிகளையும் அறிந்து கொள்ளுகின்றோம். காட்டாக,

"நவமணிகளில் — தலைமணிகள் = வைரம், முத்து, மரகதம், மாணிக்கம்.
இடைமணிகள் = நீலம், புட்பராகம், வைடூரியம்.
கடைமணிகள் = கோமேதகம், பவளம்.

என்பதும்,

"சீன தேசத்துச் செயற்கை முத்துக்களில் வியப்பைத் தரும் பலவகை உண்டு. உட்கார்ந்த நிலையில் இருக்கும் புத்தருடைய உருவத்தில் அமைந்த முத்துக்கள் அங்கே கிடைக்கின்றன. புத்தர் உருவத்தை மெல்லிய ஈயத்தினாலாவது, தகரத்தினுலாவது செய்து சிப்பியின் வயிற்றுக்குள் செலுத்திச் சில காலங்கழித்து அது முத்தாகும் போது அவர்கள் எடுக்கிறார்கள். இம்முறையைச் சீனர்களே கண்டு அறிந்தனர்" என்பதும் "சூரியகாந்தம் என்பது தனிக்கல் அன்று, கண்ணாடியின் ஒரு வகையே என்று விஞ்ஞானிகள் கூறுவர்" என்பதும் இன்னும் இவைபோன்ற பலவும் நமக்குப் புதுமையாகவும் வியப்பைத் தருவனவாகவுமிருக்கின்றன.

மேலும், மணிகளைப்பற்றிய நமது முன்னோரின் கூர்த்த அறிவையும், மிகுந்த அனுபவத்தையும் கண்டுணரும் வாய்ப்பினைத் தந்துள்ளார் இதன் ஆசிரியர்.

நவமணியாம் இந்நூல் நந்தமிழன்னைக்கு என்றும் வாடாத மலர்மாலையாகச் சூட்டப்பட்டுள்ளதைக் கண்டு தமிழறிஞர்கள் அகமகிழ்வர். இவ்வாசிரியரின் முயற்சியும் உழைப்பும் பெரிதும் பாராட்டற்குரியன. இத்துறையில் மேலும் பல நூல்கள் நம் மொழியில் வெளிவரவேண்டும். அதற்கு இந்நூல் ஒரு வழிகாட்டியாகவுள்ளது என்றால் மிகையாகாது.

கு. மா. திருநாவுக்கரசு

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரூ.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ண சரித்திர விமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கஞநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	8	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும்உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினு விடை	—	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகைதிருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானமிர்தக்கட்டளை	—	0	3	0
33.	மரீஷாபஞ்சகம்	—	0	8	0
36.	உவமானசங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6	0
42.	அகராதி நிகண்டு	—	0	12	0
43.	மேகவிடு தூது	—	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	—	0	2	0
45.	தண்டலையார் சதகம்	—	0	4	0
46.	இராமோதந்தம்	—	0	3	0
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6	0
52.	கூடற்புராணம்	—	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6	0
54.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12	0
56.	பாப்பாவினம்	—	0	10	0
57.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3	0
59.	கடம்பர் கோயில் உலா	—	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6	0
61.	கலைசைக்கோவை	—	0	12	0
62.	பெருந்தொகை	—	5	0	0
63.	குடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5	0
64.	சிராமலைக்கோவை	—	0	12	0
65.	மத்யவியாயோகம்	—	0	2	0
67.	அமிர்தரஞ்ஜநி	—	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	—	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட் பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக்கொடுக்கப்படும்.

இவ்விதழ், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள் திரு. பி. டி. இராசன் (B. A., Bar-at-law, M. L. C.) அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.